தற்போதைய வணிகத் துறை போட்டிகள் நிறைந்த ஒன்றாகும். வியாபாரத்துறை சிறந்து விளங்க வேண்டுமாயின் விளம்பரங்களே துணைபுரியும் கருவியாகின்றன.



விளம்புதல் என்ற சொல்லின் பொருள் திரும்பத் திரும்பச் சொல்லுதல் எனப் பொருள்படும். ஒரு பொருளை விற்பனை செய்வதற்கு அப்பொருளைப் பற்றிய விவரங்களைத் திரும்பத் திரும்பக் கூற வேண்டும். அவ்வகையில் வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள், முகநூல் போன்ற தகவல் ஊடகங்கள் பெரிதும் பங்காற்றுகின்றன.

விளம்பரங்களின் மூலம் பல நிறுவனங்கள் தங்களின் வணிகத்தில் முன்னேற்றம் காண்கின்றன. தகவல் ஊடகங்கள் மட்டுமன்றி சுவரொட்டி, பேருந்துகள், மின்சார இரயில்கள், சாலையோர பதாகைகள் போன்றவற்றிலும் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. பலவிதமான விளம்பரங்களினால் பொதுமக்கள் கவரப்படுகின்றனர். தங்களுக்குப் பிடித்தமான பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர்.

பொருள்களை வாங்கும் சக்தி அதிகரிப்பதனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் காண்கின்றது. மேலும், உள்நாட்டுப் பயன்பாடும் அதிகரிக்கின்ற இதன்மூலம் அவற்றின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கின்றது. தொடர்ந்து நாட்டின் பணபலத்தை வலுப்படுத்த வழிவகுக்கின்றது.



விளம்பரங்கள் உள்நாட்டு மக்களை மட்டுமன்றி வெளிநாட்டு மக்களையும் ஈர்க்க செய்கின்றன. இதனால், வெளிநாட்டவரும் ந நாட்டுப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்த முற்படுகின்றனர். இதன் மூலம் நம் நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வாய்ப்பும் கிடைக்கின்றது.




தொடர்புச் சாதனங்களின் மூலம் வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு வினாடிக்கு, நிமிடத்திற்கு என்று குறிப்பிட்ட தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது. சுவரொட்டிகள், பேருந்தில் விளம்பரங்கள் போன்றவற்றுக்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திய பிறகே அத்தகைய விளம்பரங்களைச் செயல்படுத்த முடியும். நிறுவனங்களால் செலுத்தப்படும் விளம்பரத் தொகையும் நாட்டின் வருமானமாகவே அமைகின்றது.

தனி நபர், நிறுவனங்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்கான செலவுதான் விளம்பரம். ஆயினும், பயனீட்டாளர்களாகிய நாம் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்கிப் பயன்பெற வேண்டும்.

## வினாக்களுக்கு விடையளித்திடுக.

1. விளம்பரங்கள் எத்துறையின் கருவியாக விளங்குகின்றன?

2. விளம்புதல் எனும் சொல்லின் பொருள் யாது?

3. விளம்பரங்களைத் தாங்கிச் செல்லும் சாதனங்கள் யாவை?

4. விளம்பரங்கள் மூலம் நிறுவனங்கள் எவ்வாறு பயனடைகின்றன?

5. விளம்பரங்களினால் நாடு பெறும் நன்மைகளைக் கூறுக.

விளம்பரங்களைத் தாங்கிச் செல்லும் சாதனங்கள் தகவல் ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டி, சாலையோர பதாகைகள், மின்சார இரயில், பேருந்துகள் போன்றவையாகும்.

விளம்பரங்களினால் நாடு அடையும் பயன்கள் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் காணும், நாட்டின் வருமானம் அதிகரிக்கிறது மற்றும் ஏற்றுமதியையும் அதிகப்படுத்த முடியும்.

விளம்பரங்கள் வியாபாரத்துறையின் கருவியாக விளங்குகின்றன.


விளம்புதல் என்பதன் பொருள் திரும்பச் திரும்பச் சொல்லுதல் என்பதாகும்.

விளமபரங்கள் மூலம் நிறுவனங்கள் தங்களின் உற்பத்திகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றனர், பொதுமக்களைக் கவர்கின்றனர், வெளிநாட்டு மக்களையும் ஈர்க்கப்படுவதன் வழி பயனடைகின்றனர்.

LIVEWORKSHEETS

குமணன் : அமணா! இன்றைய தமிழ் நாளிதழைப் பார்த்தாயா?

அமணன் : அப்படி என்ன முக்கியமான செய்தி வந்துள்ளது?



குமணன் : நம் நாட்டு தொழில் துறையில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் டான் ஸ்ரீ தோனி பெர்னாண்டஸ் பற்றிய செய்திதான் அது.

அமணன் : ஓ! அப்படியா? அவருடைய முன்னேற்றத்தின் சிறப்பு என்ன?

குமணன் : ஆரம்பத்தில் ஒரு நிறுவனத்தில் கணக்காய்வாளராய்த் தம் பணியைத் தொடங்கினார். பிறகு இசைத்துறை சார்ந்த நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றினார். 2001-ஆம் ஆண்டு நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த ஏர் ஆசியா விமான நிறுவனத்தை வாங்கினார்.




அமணன் : அவர் எப்படி ஏர் ஆசியா விமான நிறுவனத்தை மேம்படுத்தினார்?

குமணன் : அதை வாங்க தம் சொந்த வீட்டை அடைமானம் வைத்துப் பணத்தைத் திரட்டினார். ''அனைவரும் பறக்கலாம்'' என்ற முழக்கத்துடன் விமானப் பயணக் கட்டணத்தை மலிவு விலைக்குக் கொண்டு வந்தார். இன்று உலகம் போற்றும் அளவிற்கு அந்நிறுவனத்தை வெற்றிப்பாதைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

அமணன் : அவர் புகழ் அடைவதற்கு இந்த விமான நிறுவனம் மட்டும்தான் காரணமா?

குமணன் : இல்லை! அவர் விமான நிறுவனத்துடன், 2007-இல் 'டியூன்' தங்கும் விடுதியை ஆரம்பித்தார். பிறகு, காப்புறுதி நிறுவனம், காற்பந்து விளையாட்டு போன்ற துறைகளில் ஈடுபட்டு அல்லும் பகலும் அயராது உழைத்து இன்று உலகம் போற்றும் அளவிற்கு உயர்ந்துள்ளார்.



அமணன் : அவரைப் போன்று ஒவ்வோர் இந்தியரும் வாழ்க்கையில் முன்னேற அயராது உழைக்க வேண்டும்.

நாளிதழில் வெளிவந்த முக்கியமான செய்தி என்ன?

ஏர் ஆசியா விமான நிறுவனத்தை எவ்வாறு மேம்படுத்தினார்?

டான் ஶ்ரீ தோனி பெர்னான்டாஸ் புகழ்பெற என்ன காரணம்?

ஏர் ஆசியா விமான நிறுவனத்தைத் தன் சொந்த வீட்டை அடைமானம் வைத்து மேம்மபடுத்தினார்.

டான் ஶ்ரீ தோனி பெர்னான்டாஸ் புகழ்பெற விமான நிலையத்தைத் தவிர்த்து டியூன் தங்கும் விடுதி, காப்புறுதி நிறுவனம், காற்பந்து விளையாட்டு துறைகளில் ஈடுபட்டு அயராது உழைப்பின் வழியே புகழ்பெற்றார்.

நாளிதழில் வெளிவந்த முக்கியமான செய்தி நம் நாட்டு தொழில்துறையில் வெற்றி பெற்ற டான் ஶ்ரீ தோனி பெர்னான்டாஸ் பற்றியதாகும்.

LIVEWORKSHEETS